[2006 ஜனவரி 21

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கல்விக் கட்டணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கல்விக் கட்டணம் அதிகமாக இருப்பதால் பெற்றோர்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பாக அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இது குறித்துச் சுருக்கமாகப் பேச அவரை அழைக்கிறேன். திரு. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் மாணவர்களின் கல்விக் கட்டணமானது கல்லூரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணங்களைவிட அதிகமாக இருப்பதால் பெற்றோர்களுக்கு ஏற்படும் சிரமத்தைக் குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன். சில தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் கட்டணம் நிர்ணயம் செய்யும்போது மாதம் ரூபாய் 500, 1,000 என்று வசூலிக்கின்றார்கள். அதோடு சிறப்புக் கட்டணமாக ஆண்டுக்கு 25,000, 50,000 ரூபாய் என்று வசூலிக்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. இதனால் நடுத்தர மக்களுடைய குழந்தைகள் பள்ளிகளில் சேர்ந்து படிப்பதற்கு மிகுந்த அவதியுறுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, இதுபோன்ற செயல்களை கட்டுப்படுத்துகின்றவகையில் வெளிப்படையாக அந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் எவ்வளவு கட்டணம் வசூலிக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கின்றவகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் திரு. டி.ஏ.பாய் வழக்கில் சுயநிதி கல்வி நிறுவனங்கள் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணங்களை அரசு நிர்ணயிக்க முடியாது எனவும், அக்கல்வி நிறுவனங்களே கல்விக் கட்டணங்களை நிர்ணயிக்கும்வகையில் தீர்ப்பளித்துள்ளது. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளை முறைப்படுத்துதல் குறித்து ஆராய அரசால் அமைக்கப்பட்ட முனைவர் திரு. சிட்டிபாபு அவர்கள் தலைமையில்

2006 ஜனவரி 21] [திரு. சி.வி. சண்முகம்]

அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு கல்விக் கட்டண விகிதங்களை அமைக்க ஆலோசனைகள் வழங்கலாம் என தெரிவித்ததைத் தொடர்ந்து, அரசாணை 48, 21–7–2000 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேலும், இவ்வரசாணையின் அடிப்படையில், பள்ளிகள் அமைந்துள்ள பகுதி, பள்ளியின் தரம், அவற்றில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டடம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதி, மாணவர் எண்ணிக்கை, படிக்கும் வகுப்பு இவற்றின் அடிப்படையில் கல்விக் கட்டணங்களை நிர்ணயிக்க வழிகாட்டி நெறிமுறைகளை மெட்ரிக் பள்ளி இயக்குநர் அவர்களின் செயல்முறை, நாள் 17–8–2000 அன்று அறிவுரை வழங்கியுள்ளார்கள். மேலும், நிர்ணயிக்கப்படும் கல்விக் கட்டணம் நியாயமானதாகவும், பெற்றோர்கள் பணம் செலுத்தும் வசதிக்கேற்ப இருந்திடல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 11–25

3. கவன ஈர்ப்பு

சீர்காழி தொகுதி, மகேந்திரபள்ளி முதல் காட்டூர் வரை கொள்ளிடம் ஆற்றங்கரையைப் பலப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55–ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. நா. சந்திரமோகன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. நா. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சீர்காழி தொகுதி, மகேந்திரப்பள்ளி முதல் காட்டூர் வரையுள்ள கொள்ளிடம் ஆற்றங்கரையைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்த” அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.